பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 06 வெள்ளிக்கிழமை 23.09.2022 கதிர் 209

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கொடியேற்றம் நாளை

### ஒக்டோபர் 8ஆம் திகதி தேர்



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்த ☞2

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி கொழும்பு நீதிமன்றம் முன்பாகப் போராட்டம்!








பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்துத் திரட்டும் போராட்டம் இன்று கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்துக்கு முன்பாக முன்னெடுக் கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், சட்டத்தரணிகள், சட்டக்கல்லூரி மாணவர்கள், சர்வமதத் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இதில் பங்கேற்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்துத் திரட்டும் போராட்டம் நாளை காலை களுத்துறையிலும், அதைத் தொடர்ந்து காலி மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையைப் பரிந்துரைக்குக!

### இந்தியாவிடம் யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் கோரிக்கை

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பரிந்துரைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்ற இந்தியாவின் உதவியை வலியுறுத்தி நிற்கின்றோம்.

– இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

இந்தியா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய உறுப்பு நாடு மட்டுமல்லாது, அது நமது சக்தி வாய்ந்த முக்கியமான அண்டை நாடாகவும், பிராந்திய வல்லரசாகவும் உள்ளது. ☞8

## வவுனியாவில் இளைஞர் குழு தாக்குதல்; ஒருவர் படுகாயம்!



(வவுனியா நிருபர்)

வவுனியா - பட்டாணிச்சூர் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் தமிழ் இளைஞர் மீது இஸ்லாமிய இளைஞர்கள் தாக்குதல் ☞2

## சிறுவர் இல்லங்களில் பிள்ளைகள் எண்ணிக்கை வடக்கில் திடீர் அதிகரிப்பு

அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடி காரணமாக பிள்ளைகளைப் பராமரிக்க முடியாதெனத் தெரிவித்து சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில், பெற்றோரால் ஒப்படைக்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை வடக்கு மாகாணத்தில் இந்த ஆண்டு சடுதியாக அதிகரித்துள்ளது. அதிலும் யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிகளவான பிள்ளைகள் அப்படி ஒப்படைக் கப்பட்டுள்ளனர். ☞2

## கூட்டுப் பாலியல் சேஷ்டை; 10 இளைஞர்கள் சிக்கினர்!

யாழ். காரைநகருக்கு சுற்றுலாவியாக வந்திருந்த ஸ்பெயின் நாட்டுப் பெண்ணை 10 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஒன்றிணைந்து அச்சுறுத்தி, பாலியல் சேஷ்டையில் ஈடுபட்டனர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் , பாலியல் சேஷ்டை புரிந்தனர் என்று அடையாளம் காணப்பட்ட ☞2

## இராவணனும் இல்லை; சிவ வழிபாடும் இல்லை

### வன்மத்தைக் கக்கிய வீரசேகர



இலங்கையில் இராவணன் என்ற மன்னனும் இல்லை. சிவ வழிபாடும் கிடையாது என்று தெரிவித்த முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட ☞2

## அன்று முரண் இல்லை; இன்று எவ்வாறு முரண்?

### ஜெனிவா விவகாரம் தொடர்பில் நீதி அமைச்சரிடம் சுமந்திரன் கேள்வி



இலங்கை அரசு 2015ஆம் ஆண்டு இணைஅனுசரணை வழங்கிய விடயம் இப்போது எப்படி அரசமைப்புக்கு முரணானது? என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேள்வி எழுப்பினார் ☞2

## கோணேஸ்வரத்துக்குச் சென்று பிரச்சினைகளை ஆராய்வேன்!

### சபையில் அமைச்சர் விதுர தெரிவிப்பு



திருக்கோணேஸ்வரம் ஆலயம் தொடர்பான பிரச்சினைகளை நேரில் ஆராய அங்கு விரைவில் தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு ஆலய நிர்வாகத்தினருடன் கலந்துரையாடவுள்ளதாக ☞2

## நாடாளுமன்றில் தேவாரம் பாடிய சிறிதரன் எம்.பி.



நாடாளுமன்றத்தில் நிரை கழல் அரவம் சிலம்பு ஒலி அலம்பும் நிமலர், நீறு அணி ☞2

## யாழ்ப்பாணத்துக்கு இந்தியாவில் இருந்து ஒரு விமானத்தையாவது கொண்டு வருக!

### கூட்டமைப்பிடம் நிமால் கோரிக்கை



யாழ்ப்பாணம் (பலாலி) சர்வதேச விமான நிலையத்துக்காக எமது தரப்பில் இருந்து செய்யக் கூடிய அனைத்தையும் செய்து விட்டோம். ஆனால் ☞8

## கோணேஸ்வரத்துக்கு.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. சிவ ஞானம் சிறிதரனால் முன்வைக்கப்பட்ட திருக்கோணேஸ்வரம் ஆலய ஆக்கிர மிப்பு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணைக்குப் பதிலளித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

வரலாறுகள் தொடர்பில் நான் பேச விரும்பவில்லை. அகழ்வாராய்ச்சிகளில் பௌத்த, இந்துபுராதன அடையாளங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, வரலாற்றை நீங்கள் திரிபுபடுத்தக்கூடாது. தொல்லியல் சட்டங்கள் மாற்றப்படும் வரை அதனைக் கடைப்பிடிப்பதே எமக்குள்ள தெரிவு.

இதேவேளை, நான் திருக் கோணேஸ்வரம் ஆலயம் தொடர்பான பிரச்சினைகளை நேரில் ஆராய அங்கு விரைவில் தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு ஆலய நிர்வாகத்தினருடன் கலந்துரையாடவுள்ளேன் - என்றார்.

இதன்போது குறுக்கிட்ட சிறிதரன் எம்.பி., நீங்கள் அங்கு வரும்போது ஆலய தரப்பினருடன் நாமும் பங்கேற்க முடியுமா? - என்று கேட்டார்.

எனினும், இதற்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்ட சரத் வீரசேகர எம்.பி., திருக் கோணேஸ்வர ஆலய நிர்வாகத்தி னரின் விருப்பத்தின்படியே அங்குள்ள கடைகள் சிங்களவர்களுக்கு வழங்கப் படுகின்றன என்று கிழக்கு மாகாண ஆளுநர் உறுதியாகத் தெரிவித்துள்ளார். ஆலய நிர்வாகமே அதனை விரும்பி யுள்ளநிலையில் அந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அனுமதிக்கக் கூடாது. இவர்கள் குழப் பங்களை ஏற்படுத்தவே செய்வார்கள் - என்றார்.

தனது உரையைத் தொடர்ந்த அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, இந்தப் பிரச்சினை சிக்கலானது. எனவே, நான் இதனைப் பேசித் தீர்ப்பேன் - என்றார்.

## இராவணனும்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர, திருக்கோணேஸ்வரம் ஆலயத்திலுள்ள கடைகளைச்சிங்களவர் களுக்குக் கொடுப்பதற்கு ஆலய பரி பாலன சபையே விரும்பும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளும ன்ற உறுப்பினர்கள் மட்டும் எதிர்ப்பது அவர்களின் அரசியல் ஆதாயத்துக்கே எனவும் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடை பெற்ற திருக்கோணேஸ்வரம் ஆலய ஆக்கிரமிப்பு தொடர்பான சபை ஒத்தி வைப்பு வேளை விவாதத்தில் உரை யாற்றுகையிலேயே இவ்வாறு தெரி வித்த அவர் மேலும் கூறுகையில்,

திருக்கோணேஸ்வரம் ஆலயம் தொடர்பில் தவறான வரலாற்றுப் பின் னணி காணப்படுகின்றது. இராணவன் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் வழி பாட்டில் ஈடுபட்டார் என்று குறிப்பிடுகின் றார்கள். ஆனால், இராவணன் என்ற ம ன்னன் இருந்தாரா, அவர் தமிழரா, சிவ வழிபாட்டில் ஈடுபட்டாரா என்பதற்கு எவ்வித சான்றும், வரலாறும் இல்லை.

திருக்கோணேஸ்வரம் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் 300 ஏக்கர் நிலப்பரப்பு காணப்படுகின்றது. இதில் 18 ஏக்கர்நிலப்பரப்பு மாத்திரம் கோயிலுக்குச் சொந்தமானது.

ஆலயத்துக்குச் செல்லும் பாதையில் சுமார் 60 கடைகள் உள்ளன. இந்தக் கடைகளைச் சிங்கவர்கள் வைத்தி ருப்பதால் கூட்டமைப்பினர் அதற்கு எதி ராக இனவாதமாக எதிர்ப்புத் தெரி விக்கின்றார்கள்.

திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் வீதி இருமருங்கில் உள்ள கடைகளைப் புதுப்பிக்க ஆலயத்தின் நிர்வாக சபையி னர் விருப்பம் தெரிவித்துள்ளார்கள். கிழக்கு மாகாண ஆளுநர் இனவாதமற் றவர். திருக்கோணேஸ்வரம் ஆலயம் தொடர்பில் தவறான வரலாற்றுப் பின்னணியே காணப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் நான்கு தூபிகள் இருந்துள்ளன. அவற் றில் மூன்று தூபிகள் கடலை நோக்கிய தாகஅமைந்ததால்அதுதிருக்கோணேஸ் வரம் எனப் பெயர் பெற்றுள்ளது.

அத்துடன் மகாவம்சத்திலும் இவ்விடயம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, எமக்கும் வரலாறு தெரியும். நாங்களும் குறிப்பிடுவோம்.

திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் தொன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். நாங்கள் பாதுகாக்கின்றோம். அதுபோல் நீங்களும் குருந்தூர்மலையைப் பாதுகாக்கக் கவனம் செலுத்துங்கள். அங்கு தமிழ் அடிப்படைவாதிகளால் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் தாக்கப்பட்டுள்ளனர் - என்றார்.

## நாடாளுமன்றில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருமேனி'' என்னும் திருக் கோணேஸ்வரர் ஆலயம் தொடர்பான தேவாரம் சிவஞானம் சிறிதரன் எம். பியால் உரத்துப் பாடப்பட்டது

நாடாளுமன்றத்தில் நேற்று திரு கோணமலை - திருக்கோணேஸ்வரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையைச் சமர்ப்பித்து உரை யாற்றுகையிலேயே கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி. சிறிதரனால் இந்தத் தேவாரம் உரத்துப் பாடப்பது.

தனது உரையை ஆரம்பிக்க முன்னர், "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்ற மாணிக்கவாசகரின் அருள்வாசகத்தைக் குறிப்பிட்ட பின்னரே, "நிரை கழல் அரவம் சிலம்பு ஒலி அலம்பும் நிமலர், நீறு அணி தி ருமேனி" என்ற திருக்கோணேஸ்வரர் ஆலயம் தொடர்பான தேவாரத்தை உரத்துப் பாடிவிட்டு திருக்கோணேஸ் வரர் ஆலயத்தின் வரலாறு அங்கு தற்போது இடம்பெறும் ஆக்கிரமிப்புக்கள் தொடர்பில் மிகவும் ஆவேசமான நிலையில் நீண்ட உரையை சிறிதரன் எம்.பி. ஆற்றினார்.

இலங்கையின் நீதித்துறையில் தமிழன் தீர்ப்பு வழங்கினால் செல்லாது; சிங்களவன் தீர்ப்பு வழங்கினால்தான் அது செல்லும் என்ற இனவாத சிந்த னையே குருந்தூர்மலை விவகாரத்தில் கையாளப்படுகின்றது என்றும், அனைத்து இடங்களிலும் தியானத்தில் இருக்கும் புத்தர் திருக்கோணேஸ்வரர் ஆலய மலையில் மட்டும் நிமிர்ந்து அமர்ந்திருக்கின்றார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## அன்று முரண்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு உருப்படியாகப் பதிலளிக்காத நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, வடக்கு - கிழக்கு நாடாளுமன்ற உறுப் பினர்களுடன் பேச்சு நடத்துவதாகக் குறிப்பிட்டார்.

ஜெனிவாவில் இடம்பெறும் மனித உரிமைகள் பேரவை அமர்வின்போது, போர்க்குற்றம் தொடர்பில் வெளியக விசாரணைகள் இலங்கையின் அரச மைப்புக்கு முரணானவை என வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தி ருந்தார். இது தொடர்பில் நாடாளும ன்றத்தில் நேற்றுக் கேள்விக்கணை தொடுக் கப்பட்டது.

கடந்த 2015 ஆம் ஆண்டு செப்டெம் பரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவின் அனுசரணையில் அதாவது அவரது இணக்கத்துடன், இலங்கை தொடர்பில் 33/1 என்ற தீர்மா னம் முன்வைக்கப்பட்டது. அதில், சர்வ தேச நாடுகளில் நீதிபதிகளால் விசாரிக் கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட் டிருந்தது. பின்னர் இலங்கையின் கோரிக்கைக்கு அமைய அது பொது நலவாய நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளின் நீதிபதிகள் என்றவாறு மாற் றப்பட்டிருந்தது.

எனினும், இந்த முறைவெளிவிவகார அமைச்சருடன் அப்போதைய மற்றும் தற்போதைய நீதி அமைச்சராக விஜதாஸ ராஜபக்சவும் ஜெனிவா சென்றிருந்த நிலையில், அரசி ன் நிலைப்பாடு அமர் வின்போது தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, வெளிவிவகார அமைச் சர் அலி சப்ரி வெளியகப் பொறிமுறை அரசமைப்புக்கு முரணானது என்று குறிப்பிட்டிருந்தார். முன்னதாக 2015 ஆம் ஆண்டு அரசமைப்புக்கு உட்பட்டி ருந்த இந்த விடயம், தற்போது அரசமைப் புக்கு முரணானது எப்படி? - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தில் கொண்டிருக்கும் அக்க றையைநானும்கொண்டிருக்கின்றோம். எனினும், மாறி வந்த அரசுகள் காரண மாக இதில் மாற்றங்கள் ஏற்பட்டமை யாவரும் அறிந்ததே. இந்தநிலையில், இந்தப் பிரச்சினை குறித்து எதிர்வரும் வாரங்களில் வடக்கு, கிழக்கில் நிலை யான சமாதானத்தைப் பேணும் வகை யில் அந்தப் பகுதி நாடாளுமன்ற உறுப் பினர்களுடன் பேச்சு நடத்த உத்தேசித் துள்ளோம் - என்று குறிப்பிட்டார்.

## ஸ்ரீ வல்லிபுர..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகோற்சவம் நாளை சனிக்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பம கவுள்ளது.

ஒக்ரோபர் முதலாம் திகதி குருக்கட்டு விநாயகர் தரிசனமும், 2ஆம் திகதி வெண்ணெய்த் திருவிழாவும், 3ஆம் தி கதி துகில் திருவிழாவும், 4ஆம் திகதி பாம்புத் திருவிழாவும், 5ஆம் திகதி கம்சன் போர்த்திருவிழாவும், 7ஆம் தி கதி சப்பறத் திருவிழாவும், 8ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 9ஆம் திகதி சமுத் திரத் தீர்த்தோற்சவமும் இடம்பெற வுள்ளன.

ஒக்ரோபர் 10ஆம் திகதி கேணித் திரு விழாவும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. பெருந்திருவிழாவை சுகாதார விதிகளின்படி நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## கூட்டுப் பாலியல்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

10 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள் ளனர். இந்தச் சம்பவம் காரைநகர் கசூரினா கடற்கரைக்கு அண்மை யாகவுள்ள வெளிச்சக் கூட்டுக் கோபுரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சுற்றுலாவியாக வந்த பெண்ணும் அவரது நண்பரும் நேற்று மாலை சென்று கொண்டிருந்தபோது அவர் களை 10 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் சுற்றிவளைத்து, தகாத வார்த்தை பிர யோகங்களையும் மேற்கொண்டுள்ள னர். அவர்களை அச்சுறுத்தும் வகை யில் நடந்து கொண்டுள்ளனர். இதன் பின்னர் சில இளைஞர்கள் சுற்றுலாவிப் பெண்ணுடன் பாலியல் சேஷ்டையிலும் ஈடுபட்டுள்ளனர். நீண்ட போராட்டத்தின் பின்னர் அவர்களிடமிருந்து தப்பித்த பெண், பொலிஸாரிடம் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைவாக நேற் றிரவே 10 இளைஞர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர்.

## சிறுவர்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவலை வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராம ரிப்புத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் பெற்றோரால் பராமரிக்க முடியாது சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் அனுமதிக்கப்பட்ட பிள் ளைகளின் எண்ணிக்கை 2018 ஆம் ஆண்டு 281 ஆகக் காணப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு 259 ஆகக் குறை வடைந்துள்ளது. 2020ஆம் ஆண்டு 174ஆக அது வீழ்ச்சியடைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டு 158 ஆக அந்த எண்ணிக்கை மிகப் பெரிய சரிவைக் கொண்டுள்ளது.

ஆனால், பொருளாதார நெருக்கடி உச்சம் தொட்டுள்ள நடப்பு ஆண்டில் முத லாவது அரையாண்டில் மாத்திரம் 246 பேர்சிறுவர்அபிவிருத்திநிலையங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 124 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 62 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 45 பேரும், மன்னார் மாவட்டத்தில் 7 பேரும், வவுனியா மாவட்டத்தில் 8 பேருமாக 246 பேர் இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச்சடுதியான எண்ணிக்கை அதி கரிப்புக்கான காரணம் தொடர்பில் வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்புத் திணைக்களத்தின் ஆணையாளர் இ.குருபரன் ஊடகங் களிடம் கருத்துத் தெரிவிக்கும்போது,

பொருளாதார நெருக்கடி காரணமா கவேபெற்றோர்தம்மால்பிள்ளைகளைப் பராமரிக்க முடியாது என்று கூறுகின் றனர். எமக்குக் கிடைக்கப்பெறும் ஒவ் வொரு கோரிக்கை தொடர்பிலும் கலந் துரையாடல்நடத்தப்பட்டு உண்மையில் பெற்றோரால் பராமரிக்க முடியாதுதான் என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே, வடக்கு மாகாணத்திலுள்ள பதிவு செய் யப்பட்ட சிறுவர் இல்லங்களில் அவர்கள் சேர்க்கப்படுகின்றனர் - என்றார்.

## வவுனியாவில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தியமையால் படுகாயமடைந்த இளைஞர் வவுனியா வைத்தியசாலை யில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட் டுள்ளார்.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா - நெளுக்குளம் பகுதி யைச் சேர்ந்த குறித்த இளைஞர் பட்டாணிச்சூர் பகுதியில் அமைந்துள்ள வியாபார நிலையம் ஒன்றுக்கு நேற்றுச் சென்றுள்ளார். இதன்போது அங்கு கூடி நின்ற குழு ஒன்று அந்த இளைஞர் மீது கடுமையான தாக்குதலை மேற் கொண்டதுடன் அவரது தொலைபேசி யைப் பறிமுதல் செய்து, மிரட்டி கடிதம் ஒன்றையும் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இளைஞர் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளதுடன் வவுனியா வைத்திய சாலையில்சிகிச்சைபெற்றுவருகின்றார்.

சம்பவத்தையடுத்து அப் பகுதியில் தமிழ்இளைஞர்களும்ஒன்றுகூடியமை யால் இரு தரப்புக்கும் இடையில் முறுகல் நிலை ஒன்று ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற நெளுக்குளம் பொலிஸார் நிலைமை யைக் கட்டுப்பாட்டுக்குள் கொண் டுவந்ததனர்.

இந்தச் சம்பவம் காதல் விவகாரம் காரணமாக இடம்பெற்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இதேவேளை, இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக செய்தி அறிக்கை யிடச் சென்ற வவுனியா பிராந்திய ஊடக வியலாளர் ஒருவரும் அச்சுறுத்தப் பட்டதுடன், அவரது கடமைக்கு இடை யூறுகள் ஏற்படுத்தப்பட்டது எனத் தெரிவித்து நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் குறித்த ஊடகவியலாளர் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பான விசா ரணைகளை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

விளம்பரத்திற்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பீரிஸ் அணியின் திரிசங்கு நிலை

நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கான வாய்ப்பு தங்களுக்கு மறுக்கப்பட்டிருப்பதாக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், டலஸ் அழகுப்பெரும தலைமையிலான அணி முறையீடு செய்திருக்கிறது.

தற்போதைய நாடாளுமன்ற முறைமையின் கீழ் இது தவிர்க்கப்பட முடியாத பிரச்சினை. பேசுவதற்கு நேரம் வேண்டும் என்ற அவர்களது முறைப்பாடு நாடாளுமன்ற நெறிமுறைகளின் கீழ் முறையானதா, வலுவானதா என்பதுதான் கேள்வி.

பேராசிரியர் ஜிஎல்.பிரீஸ் தரப்பு அணியினர் 13 பேரும் கடந்த பொது தேர்தலில் பொதுஜன பெரமுன பட்டியலில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானவர்கள். பேராசிரியர் பீரிஸ் தேர்தலை எதிர்கொள்ளாமலேயே அந்தக் கட்சியின் தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்கு வந்தவர்.

இப்போது தங்களுக்குள் ஓர் அணியாக சேர்ந்து, பொதுஜன பெரமுனவை விட்டு வெளியேறி, 13 பேர் தனி குழு என்று அறிவித்ததும் அப்படி ஒரு கட்சியாக செயல்படுவதற்கான அங்கீகாரம் முழுமையாக தங்களுக்கு வந்து விட்டதாக அவர் கருதுவது அபத்தம்.

நாடாளுமன்றப் பதிவுகளின் படியும், சபாநாயகரின் கருத்து நிலைப் படியும் அவர்கள் பொதுஜன பெரமுன சார்பில் தேர்வு செய்யப்பட்ட எம்.பிக்கள்தான். ஆகவே, அவர்களுக்கு நாடாளுமன்றத்தில் பேசுவதற்கான நேரத்தை ஒதுக்க வேண்டியது பொதுஜன பெரமுனவின் கொறடாவின் பொறுப்பு.

அந்தக் கட்சியின் சார்பில் நாடாளுமன்றுக்குத் தெரிவான பின்னர், அந்த கட்சிக்குத் 'தண்ணி காட்டி' விட்டு, அந்தக் கட்சிக்கு 'ஸேம் சைட் கோல்' அடிப்பதற்கான உரைக்குரிய நேரத்தை அக்கட்சிக்கான நேரத்தில் இருந்து தர வேண்டும் என சுயாதீனமாகச் செயற்படப் புறப்பட்ட அணி கோருவது அபத்தத்திலும் அபத்தம்.

அவர்களது பிரிவை – பிளவை – தனியான கட்சிக்குரிய பிளவு என சபாநாயகர் ஏற்றுக்கொண்டு, தனிக் குழுவுக்கு அல்லது தனியான அணிக்கு அல்லது தனியான கட்சிக்குரிய அந்தஸ்தை அந்த தரப்புக்கு வழங்குகின்ற போதுதான் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கான தனியான நேரமும் அத்தரப்புக்குத் கிடைக்கும். அதுவரை எந்தக் கட்சியின் சார்பில் நாடாளுமன்றுக்கு வந்தார்களோ அந்தக் கட்சிக்குரிய கோட்டாவில்தான் பேசுவதற்கான உரித்தை அவர்கள் கேட்க வேண்டும். அதைக் கொடுப்பது, கொடுக்காமல் விடுவது, அல்லது வேறு ஒருவருக்குக் கொடுப்பது அந்தக் கட்சியின் உரிமை. அல்லது எதிரணியுடன் சேர்ந்து செயற்படுகின்றார்கள் என்ற அடிப்படையில் எதிர்க்கட்சியினர் தமக்குரிய நாடாளுமன்ற நேரத்தை இவர்களுக்கு ஒதுக்கித் தர வேண்டும்.

'இப்போது ஆளும் பொதுஜன பெரமுனவில் நாங்கள் இல்லை, அதற்கு எதிர்த் தரப்பில் இருக்கிறோம்' – என்று பீரிஸ் – டலஸ் அழகப்பெரும தரப்பு அறிவிப்பு விட்டிருப்பதால் எதிரணிக்குரிய பேச்சு நேரத்தில் தங்களுக்கும் அவர்கள் பங்கு கேட்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

எம்.பி. பதவியை மட்டும் விட்டுக் கொடாமல், ஆளும் தரப்பிலிருந்து தாங்கள் மூடை முடிச்சைக் கட்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டால், அந்தப் பதவிக்குரிய எல்லா உரித்தும் தங்களுடன் சேர்ந்து வந்து விடும் என்று பீரிஸ் அணி எதிர்பார்ப்பது அர்த்தமற்றது.

## இரவு வாழ்க்கைச் செயற்பாடுகளை அறிமுகப்படுத்துவது குறித்து பேசும்போது விபச்சாரத்தைக் குறிப்பிடவில்லை!

### தனது கருத்தின் விளக்கத்தைக் கூறுகிறார் டயனா கமகே

இரவு வாழ்க்கைச் செயற்பாடுகளை அறிமுகப்படுத்துவது தொடர்பாகப் பேசும்போது, தான் விபசாரத்தைக் குறிப்பிடவில்லை எனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் டயனா கமகே இரவு வாழ்க்கை விபச்சாரத்துக்கு அப்பாற்பட்டது என்றும் தெரிவித்தார்.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது கலாசாரம் மற்றும் மதம் பற்றி பேசுபவர்கள் இலங்கையை எவ்வித அபிவிருத்தியும் இன்றி தேக்கமடையச் செய்கிறார்கள் என்றும் அவர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றில் மேலும் தெரிவித்துள்ள அவர் –

நாட்டை முன்னேற்ற முயற்சி எடுக்கும்போது சிலர் கலாசாரம் மற்றும் மதம் பற்றி பேசத் தொடங்குகிறார்கள். துறவிகள்கூட என்னை விமர்சித்துள்ளனர். மதம் பற்றி பேசி என்னை விமர்சிப்பவர்கள் பௌத்தம் பற்றி அறிந்திருக்க மாட்டார்கள்.

மதுபானக் கடைகள் காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை திறந்திருக்க வேண்டும் என்று நான் முன்மொழிகிறேன். நான் இந்த முன்மொழிவை முன்பே செய்துள்ளேன். மீண்டும் ஒரு முறை முன்மொழிய விரும்புகிறேன்.

மதுக்கடைகளை முன்கூட்டியே மூடும்போது பின்வாசல் வழியாக அனுமதியின்றி விற்பனை நடக்கிறது. இதுபோன்ற விற்பனை மூலம் அரசு வரி வசூலிக்க முடியாது. அனைத்து பல்பொருள் அங்காடிகளுக்கும் பீர் உரிமம் வழங்கப்பட வேண்டும் என்றும் நான் முன்மொழிகிறேன். ஒரு வெளிநாட்டு சுற்றுலாப் பயணி இரவில் சிறிது மதுபானம் வாங்க முடியும். கஞ்சா தோட்டத்தை அனுமதிக்க வேண்டும் என்றும் நான் முன்மொழிந்தேன். அது மக்கள் சாலையோரத்தில் கஞ்சா எடுப்பதை அங்கீகரிக்க வேண்டுமென நான் கூறவில்லை. கஞ்சாவை ஆயுர்வேத மருந்தாக விளம்பரப்படுத்த வேண்டும் என்பதே எனது கருத்து. – என அவர் மேலும் தெரிவித்தார்.

## பொருளாதார நெருக்கடிகளிலிருந்து இலங்கைமீள ஆதரவு வழங்குவோம்!

### ஆஸ்திரேலியா பகிரங்க அறிவிப்பு

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்குத் தேவையான ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாக ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பால் ஸ்டீவன்ஸ் தெரிவித்துள்ளார்.

அஸ்கிரிய பீடாதிபதிகளை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஜெனீவா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் அரசியல் விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் விக்டோரியா நுலாந்திற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இரு நாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் மேம்படுத்துவது தொடர்பாக இந்தச் சந்திப்பில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

## முட்டையொன்றின் விலை 75 ரூபாவரை எகிறவாய்ப்பு!

நாட்டில் எதிர்வரும் காலப்பகுதியில் முட்டையொன்றின் விலை 75 ரூபா வரை அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரசாயன உரத்துக்கு விதிக்கப்பட்ட தடைக் காரணமாக, நாட்டில் முட்டை மற்றும் கோழிப்பண்ணை தொழில் பாரிய வீழ்ச்சி அடைந்துள்ளதாக தேசிய கால்நடைவள அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலையில் கோழிகளின் எண்ணிக்கை பாரியளவில் குறைவடைந்துள்ளதால் முட்டை மற்றும் கோழி இறைச்சித் தொழிற்துறையை மீள முன்னோக்கி கொண்டு செல்வதற்கு மேலும் காலம் எடுக்கும் என அந்தச் சபையின் தலைவர் பேராசிரியர் எச்.டபிள்யு சிறில் தெரிவித்துள்ளார்.

வர்த்தக அமைச்சு முட்டைக்கான கட்டுப்பாட்டு விலையை அமுலாக்குவதற்கு முன்னர், கால்நடைவள அபிவிருத்தி சபையில் எவ்வித ஆலோசனைகளையும் பெறவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்காரணமாக எதிர்வரும் காலப்பகுதியில் முட்டையொன்றின் விலை 75 ரூபா வரை அதிகரிக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 11 வயது மகளை போதைப்பொருள் விற்பனையில் யாழில் ஈடுபடுத்திய தாய்!

தாயாரால் போதைப்பொருள் விற்பனைக்கு பயன்படுத்தப்பட்ட பதின்ம வயது மகள் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளால் மீட்கப்பட்டு நீதிமன்றின் உத்தரவில் சிறுவர் இல்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த 11 வயதுச் சிறுமியே கடந்த செவ்வாய்க்கிழமை இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார்.

சிறுமி 4 மாதங்களுக்கு மேலாக பாடசாலைக்கு செல்லாத நிலையில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர் தாயாரின் பாதுகாப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளார்.

சிறுமி யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது, அவரை சிறுவர் இல்லத்தில் சேர்த்து பராமரிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டமை தொடர்பில் சிறுமியின் பெற்றோர் மீது நீதிமன்ற வழக்குகள் உள்ளன என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

## சிறுவர்களிடையே மீண்டும் கை, கால் மற்றும் வாய்களில் தொற்று பரவுவதாக எச்சரிக்கை!

சிறுவர்களிடையே மீண்டும் கை, கால் மற்றும் வாய்களில் தொற்று பரவுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

காய்ச்சலுடன் அல்லது காய்ச்சல் இன்றி சிறுவர்களின் கை, கால் மற்றும் வாயைச் சுற்றி சிவப்பு நிறத்தில் தளும்புகள் அல்லது வெள்ளை நிற கொப்புளங்கள் ஏற்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெற்றோர் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா கூறியுள்ளார்.

6 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கே இந்தம் தொற்று ஏற்படுவதால், அவ்வாறான கொப்புளங்கள் மற்றும் தளும்புகள் காணப்படுமாயின் பிள்ளைகளை வெளி இடங்களுக்கு அனுப்பாது சில நாள்கள் வரை வீடுகளில் வைத்திருக்குமாறும் பெற்றோருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

# ஹிஜாப் எதிர்ப்பு போராட்டம் தீவிரம்; ஈரானில் இதுவரையில் 31 பேர் சாவு!

ஈரான், செப்.23

ஈரானில், 'ஹிஜாப்' அணிவதற்கான கட்டுப்பாடுகளை எதிர்த்து பெண்கள் நடத்தி வரும் போராட்டத்தில், இதுவரையில் 31 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக உள்ள, மேற்காசிய நாடான ஈரானில், 7 வயதுக்கு மேற்பட்ட பெண்கள், 'ஹிஜாப்' எனப்படும் முகத்தையும், தலைமுடியையும் மறைக்கும் துணி மற்றும் தலை முதல் கால் வரை உடலை மறைக்கும் கறுப்பு அங்கியை அணிவது கட்டாயமாகும்.

அவ்வாறு அணியாதவர்களை கண்காணிப்பதற்காகவே ஒழுக்கக் கண்காணிப்பு காவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றமையுடன் இவர்கள் ஹிஜாப் அணியாத பெண்களுக்கு அபராதம், சிறை தண்டனை ஆகியவற்றையும் வழங்குகின்றனர்.


இந்நிலையில், மாசா அமினி, 22, என்ற பெண், தலைமுடியை முழுமையாக மறைக்கும் விதமாக ஹிஜாப் அணியாததமைக்காக சமீபத்தில் கைது செய்யப்பட்டார். பொலிஸ் காவலில் இருந்தபோது உடல் நலக்குறைவு ஏற்பட்டு, கோமா நிலைக்கு சென்று, மர்மமான முறையில் உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து, ஹிஜாப் கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஈரானில் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகின்றன.

இது குறித்து ஐரோப்பிய நாடான நோர்வேயின் ஒஸ்லோவை தலைமையிடமாக வைத்து செயல்படும் ஈரான் மனித உரிமை அமைப்பின் இயக்குநர் மஹ்மூத் அமிரி மோகதம்ச்நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-ஈரானின் குர்திஸ்தான் மாகாணத்தில் முதலில் போராட்டம் ஆரம்பித்து தற்போது, 30க்கும் மேற்பட்ட நகரங்கள் மற்றும் பெருநகரங்களில் போராட்டம் தீவிரமடைந்துள்ளதுடன், போராட்டத்தில் ஈடுபடுவோர் மீது பொலிஸார் அத்துமீறி தாக்குதல் நடத்தி வருகின்றனர். பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் கிடைத்துள்ள தகவலின்படி, 31 பேர் இதுவரையில் போராட்டங்களின்போது கொல்லப்பட்டுள்ளகை உறுதியாகி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



# உக்ரைன் போர் முடிவுக்கு வருவதே அனைத்து நாடுகளினதும் விருப்பம்

## ஜோ பைடன் ஐ.நாவில் தெரிவிப்பு



நியூயோர்க், செப்.23

ஐ.நா. பொதுச்சபையில் உள்ள அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போரை கண்டிக்கின்றன என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கூறினார்.

ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தின் பொறுப்புகளை பொறுப்பற்ற முறையில் புறக்கணிக்கும் வகையில், புடின் ஐரோப்பாவிற்கு எதிராக அணு ஆயுத அச்சுறுத்தல் விடுத்துள்ளார். மேலும் ஐ.நாவின் சாசனத்தின் அடிப்படை கொள்கைகளை ரஷ்யா வெட்கமின்றி மீறியுள்ளதாக கடுமையாக விமர்சித்தார். அத்துடன் அமெரிக்கா உள்ளிட்ட அனைத்து நாடுகளும் உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா மேற்கொண்டுள்ள போரை முடிவுக்கு கொண்டு வர விரும்புகின்றன. அதனால் தான் ஐ.நா. பொதுச்சபையில் உள்ள அனைத்துநாடுகளும்ஒன்றிணைந்து உக்ரைனுக்கு எதிரானரஷ்யாவின் போரைக் கண்டிக்கின்றன. - என்று தெரிவித்தார்.

இது தொடர்பில் புடின் கூறுகையில் -

மேற்கத்திய நாடுகள், ரஷ்யாவை பிரிக்கவும், பலவீனப்படுத்தி அழிக்கவும் முயற்சிக்கின்றன. அந்நாடுகள் கடந்த 1991ல் ரஷ்யாவைப் பிரித்தன எனவும், தற்போதும் அதேபோன்று பிரிக்க நேரம் வந்துவிட்டதாகப் பேசுகின்றன. ரஷ்யாவைப் பல நாடுகளாகப் பிரிக்க வேண்டும் என்கின்றனர். உக்ரைன், அந்நிய கூலிப்படையினர், வெளிநாட்டவர்கள், நேட்டோ பயிற்சி பெற்ற வெளிநாட்டு இராணுவ வீரர்களை அழைத்து வருகிறது. இன்று நமது வீரர்கள், ஆயிரம் கி.மீ., தூர எல்லையில், ஒட்டுமொத்த மேற்கத்திய இராணுவ இயந்திரங்களுக்கு எதிராக போரிட்டு வருகிறார்கள். ரஷ்யர்கள் அதிகம்வசிக்கும் டான்பாஸ் பிராந்தியத்தை உக்ரைன் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிப்பதே இந்த போரின் நோக்கம் ஆகும். - என்றார்.

# சிறுபான்மையினரின் உரிமைகளை கடுமையாக மீறுகின்றது பாகிஸ்தான்

## ஐ.நா.வில் இந்தியா குற்றச்சாட்டு..!!

நியூயார்க், செப்.23



பாகிஸ்தானில் சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்ந்து கடுமையாக மீறப்படுவதாக ஐ.நா.வில் இந்தியா குற்றம்சாட்டியுள்ளது.

சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான ஐ.நா.வின் உயர்மட்டக் கூட்டம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்றது. இதில் ஐ.நா.வுக்கான பொருளாதாரம் மற்றும் சமூகத் திற்கான இந்தியாவின் இணைச் செயலாளர் ஸ்ரீனிவாஸ்கோட்ரூ உரையாற்றினார். அப்போது, இந்தியாவில் சிறுபான்மையினர் மற்றும் காஷ்மீர்விவகாரம் தொடர்பாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் பிலாவல் பூட்டோ சர்தாரி பேசியமைக்கு அவர் பதிலடி கொடுத்தார்.

பாகிஸ்தானில் சிறுபான்மையினர்களான சீக்கியர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் அகமதியர்களின் உரிமைகள் கடுமையாக மீறப்படுகின்றன எனவும், ஆனால் இங்கு அவர்களின் உரிமைகள் குறித்து பாகிஸ்தான் பேசுவது முரண்பாடாகவும் நகைப்புக்குரியதாகவும் உள்ளதாக ஸ்ரீனிவாஸ் கோட்ரூ தெரிவித்தார்.

சிறுபான்மையினரின் உரிமைகள் குறித்த விவகாரத்தை ஐ.நா.வுக்கு பாகிஸ்தான் கொண்டுவந்திருப்பது ஆச்சரியமளிப்பதாகவும், உலகம் இது வரைக் கண்டிராத உரிமைகளை கடுமையாக மீறும் நீண்ட வரலாற்றை அந்நாடு கொண்டிருப்பதாகவும் இந்தியப் பிரதிநிதி ஸ்ரீனிவாஸ் கோட்ரூ கடுமையாக குற்றம்சாட்டியிருந்தார்.

# 18 முதல் 65 வயதுக்கு உட்பட்டவர்கள் ரஷ்யாவில் இருந்து வெளியேறத் தடை!

## கட்டாய இராணுவச் சேர்ப்பு நடவடிக்கைகள் தீவிரம்..!!


மொஸ்கோ,செப்.23

ரஷ்யாவில், 18 முதக் 65 வயது வரை உள்ளவர்கள் விமானம் மற்றும் ரயில்களில் நாட்டைவிட்டு வெளியேறப் பயணச்சீட்டு வழங்கக் கூடாது என அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளதாக ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் மீது, ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் போர் தொடுத்தது. தற்போது, போர் ஏழு மாதங்களை எட்டியுள்ள நிலையிலும், அது நீடித்து வருகிறது. இதற்கிடையே ரஷ்யப் படைகளுக்கு எதிராக, உக்ரைன் இராணுவம் கடும் எதிர் தாக்குதல் நடத்தி வருகிறது.

மேலும், போரைத் தீவிரப்படுத்தும் வகையில், உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்கே உள்ள சில பிராந்தியங்களைத் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர ரஷ்யா திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில், தொலைக்காட்சி வாயிலாக ரஷ்ய மக்களிடையே அதிபர் விளாடிமிர் புடின் ஆற்றிய உரையில், 'ரஷ்ய ராணுவத்தில் மூன்று லட்சம் வீரர்கள் இருப்பில் வைக்கப்படுவர்' எனத் தெரிவித்தார்.



இந்த அறிவிப்பை அடுத்து, ரஷ்யாவின் அண்டை நாடுகளான ஆர்மேனியா, ஜோர்ஜியா, அஸர்பைஜான், கஜகஸ்தான் உள்ளிட்ட நாடுகளுக்கு செல்லும் விமானங்கள் அடுத்த சில நாள்களுக்கு முழுவதுமாக முன்பதிவு செய்யப்பட்டுள்ளன. அனைவரும் கட்டாய இராணுவ சேவையில் ஈடுபடும் சட்டத்தை ரஷ்ய அரசு அமுல்படுத்தகூடும் என்பதால் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில் இராணுவத்தில் பணியாற்றத் தகுதியுடைய 18 முதல் 65 வயது வரையிலான ரஷ்யர்கள்நாட்டைவிட்டுவெளியேற விமானம் மற்றும் ரயில்களில் பயணச்சீட்டு வழங்கக் கூடாது என ரஷ்ய அரசு உத்தரவிட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்களில் செய்தி வெளியானது. இராணுவத்தின் முறையான அனுமதி உள்ளவர்கள் மட்டுமே நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவர் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# காங்கிரஸ் தலைவர் போட்டிக் களத்தில் ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட்!



திருவனந்தபுரம்,செப்.23

காங்கிரஸ் தலைவர் பதவிக்குத் தான் போட்டியிட உள்ளார் என ராஜஸ்தான் முதலமைச்சர் அசோக் கெலாட் அறிவித்துள்ளார்.

காங்கிரஸ் தலைவர் பதவியை ராகுல்காந்தி கடந்த 2019 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 10 ஆம் திகதி ராஜினாமாச் செய்தார். இதனைத் தொடர்ந்து காங்கிரஸ் இடைக்கால தலைவராக சோனியா காந்தி செயல்பட்டு வருகிறார்.

இதனிடையே, காங்கிரஸ் கட்சி தலைவர் பதவிக்கு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைவர் பதவிக்கான தேர்தல் ஒக்டோபர் 17 ஆம் திகதி நடைபெற உள்ளது.

தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் வரும் நாளை 24 முதல் 30 ஆம் திகதி வரை தங்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்யலாம். தலைவர் பதவிக்கான தேர்தல் வாக்குப்பதிவு ஒக்டோபர் 17 ஆம் திகதி நடைபெறும். தேர்தலில் பதிவான வாக்குகள் ஒக்டோபர் 19 ஆம் திகதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

இதனிடையே, தலைவர் பதவிக்கு போட்டியிடுபவர்கள் யார் என்பதில் காங்கிரஸ் கட்சியினர் மத்தியில் தொடர்ந்து குழப்பமான சூழ்நிலை நிலவி வருகிறது.

குறிப்பாக, சசிதரூர், திக் விஜயசிங், அசோக் கெலாட் உள்ளிட்ட மூத்த தலைவர்கள் காங்கிரஸ் தலைவர் பதவிக்கு போட்டியிடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், காங்கிரஸ் தலைவர் பதவிக்குத் தாம் போட்டியிட உள்ளார் என ராஜஸ்தான் முதலமைச்சரும், கட்சியின் மூத்த தலைவருமான அசோக் கெலாட் இன்று அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களுக்கு முன் டெல்லியில் காங்கிரஸ் தற்காலிக தலைவர் சோனியா காந்தியை அசோக் கெலாட் சந்தித்தார். அதன்பின்னர், கேரளாவில் ராகுல் காந்தி மேற்கொண்டு வரும் ஒற்றுமை பயணத்தில் கெலாட் பங்கேற்றுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் பதவிக்கு போட்டியிட உள்ளமை தொடர்பாக அவர் கூறுகையில்-

காங்கிரஸ் தலைவர் பதவிக்கு நான் போட்டியிடுவது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது. வேட்பு மனு தாக்கல் செய்யும் திகதி குறித்து விரைவில் முடிவெடுப்பேன். நாட்டின் தற்போதைய நிலைமையை பார்க்கும்போது வலிமையான எதிர்க்கட்சி தேவை. காங்கிரஸ் தலைவராக நான் தேர்வானால் காங்கிரஸ் பொதுச்செயலாளர் அஜய் மேகன் மற்றும் கட்சியின் தலைவர் சோனியா காந்தி அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவெடுப்பார்கள்' - என்றார்.

## பிளாக்மெயில்' செய்த சிறுவனை கொன்ற இளைஞனும் தற்கொலை



குவாலியர்,செப்.23

மத்தியப்பிரதேசத்தில் தன்னை 'பிளாக்மெயில்' செய்த சிறுவனைக் கொன்று விட்டு இளைஞர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.

மத்தியப் பிரதேச மாநிலம் குவாலியர் நகரில் நேற்று வாய் மற்றும் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் 15 வயது சிறுவனின் உடல் கண்டெடுக்கப்பட்டுள்ளது. முன்னதாக கடந்த செவ்வாய்க்கிழமையன்று ஹசிரா பகுதியில் 20 வயது இளைஞர் ஒருவர் தன்னுடைய வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். அங்கு கண்டெடுக்கப்பட்ட தற்கொலைக் கடிதத்தில் சிறுவன் தன்னுடன் ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டான் எனவும், தன்னை பிளாக்மெயில் செய்ததாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் நகரில் உள்ள பழைய ஜேசி மில் வளாகத்தில் சிறுவனின் சடலம் கண்டெடுக்கப்பட்டது. அங்கு ஒரு மேக்கப் உபகரணமும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மேக்கப் கலைஞரான அந்த இளைஞர் தற்கொலை செய்துகொள்வதற்கு முன்பு சிறுவனைக் கொன்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இதுகுறித்து பொலிஸ் கண்காணிப்பாளர் அமித் சாங்கி கூறும்போது, 'இளைஞரின் தற்கொலைக் கடிதத்தில் சிறுவன் தன்னுடன் உடல் உறவை ஏற்படுத்தி, தன்னை பிளாக்மெயில் செய்தமையால்தான் இவ்வாறு செய்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது சிறுவனின் உடல் பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனை அறிக்கை மூலம் மரணத்திற்கான காரணம் தெரிய வரும்' என்று அவர் கூறினார்.

## இஸ்லாமியத் தீவிரப் போக்கு அமைப்பு மீதான பாய்ச்சலைக் கண்டித்து ஹர்த்தால் போராட்டம்




திருவனந்தபுரம், செப்.23

தீவிர இஸ்லாமியப் போக்கு அமைப்பான Popular Front of India (பி.எவ்.ஐ.) அமைப்பின் நாடு முழுவதிலும் உள்ள அலுவலகங்கள் மற்றும் தலை வர்களின் வீடுகளில் அதிரடியாக நடைபெறும் சோதனை மற் றும் தேடுதல் நடவடிக்கை ளுக்கு எதிர்ப்பு தெரிவித்து கேரளாவில் இன்று முழு அடைப்பு போராட்டத்திற்கு அந்த அமைப்பு அழைப்பு விடுத் துள்ளது.

நாட்டில் பயங்கரவாத தாக் குதல் நடத்த திட்டம், பயங்கர வாத செயல்களுக்கு நிதிஉதவி அளித்தல், பயங்கரவாத செய லுக்கு பயிற்சி, பயங்கரவாத செயலுக்கு ஆள்கள் சேர்த்தல் உள்பட பல்வேறு புகார்கள் தொடர்பாக 'பொப்புலர் பிரண்ட் ஒவ் இந்தியா' என்ற இஸ்லாமிய அமைப்பு தொடர்புடைய இடங்களில் தேசிய புலனாய்வு அமைப்பு, அமலாக்கத்துறை நேற்று அதிரடி சோதனை நடத்தியது.

தமிழ்நாடு, கேரளா உள்பட 15 மாநிலங்களில் 93 இடங் களில் இந்த சோதனை நடை பெற்றது. இந்த சோதனையின் முடிவில் ஆயுதங்கள், பணம், டிஜிட்டல் கருவிகள், பல்வேறு ஆவணங்கள் கைப்பற்றப்பட் டன. மேலும், சோதனையின் முடிவில் அந்த அமைப்பைச் சேர்ந்த 106 பேர் கைது செய்யப் பட்டனர்.

குறிப்பாக, கேரளாவில் அதிகபட்சமாக 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனி டையே, என்.ஐ.ஏ அதிகாரி களின் சோதனைக்கு எதிர்ப்பு தெரிவித்து கேரளாவில் அந்த அமைப்பு சார்பில் இன்று கேரளாவில் முழு அடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை முழு அடைப்பு நடை பெறும் என பி.எவ்.ஐ. அமைப்பு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கேரளாவில் பல்வேறு மாவட்டங்களில் கடைகள் அடைக்கப்பட்டன. தனியார் பஸ்கள், ஒட்டோக்கள் குறைவான எண்ணிக்கை யிலேயே இயங்கின. அதே வேளை, அரசு பஸ்கள் இயக் கப்பட்டன.

அந்த அமைப்பு சார்பில் கேரளாவில் பல்வேறு பகுதிகளில் போராட்டம் நடை பெற்றது. இந்த போராட்டத்தின் போது பல பகுதிகளில் வன் முறை வெடித்தது. காலை 6 மணிக்கு தொடங்கிய இந்த முழு அடைப்பு போராட்டத்தில் இதுவரை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கல் வீச்சு சம்பவங்கள் நடைபெற்றுள் ளன. குறிப்பாக, திருவனந்தபுரம், கொல்லம், பத்தம்திட்டா, ஆலப்புலா, எர்ணாகுளம், கோழிக்கோடு, வயநாடு ஆகிய மாவட்டங்களில் கல் வீச்சு சம்பவங்கள் அரங்கேறியுள்ளன.

கன்னூர் மாவட்டம் நாராணயன்பரா பகுதியில் செய்தித்தாள் கொண்டு சென்ற பைக் மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டுள்ளது. ஆலப்புலா, கோழிக்கோடு, கோட்டயம் போன்ற மாவட்டங்களில் அரசு பஸ்கள், லொறிகள், ஒட்டோ, கார்களின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டுள்ளன. சாலை யில் சென்ற வாகனங்கள் போராட்டக்காரர்களாலந் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவங்களை தொடர்ந்து கேர ளாவில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது. நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர கூடுதல் பொலிஸார் பாதுகாப்புபணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# வறுமையிலும் வாழ்வது ஒரு பலம்; அது படிப்பினைகளைத் தருகிறது!

## பாராட்டு விழாவில் வலயக்கல்விப் பணிப்பாளர் அமீர் உரை





(வி.ரி.சகாதேவராஜா)

வாழ்வில் வறுமை என்பது ஒரு பின்னடைவல்ல. அது ஒரு தடையுமல்ல. உண்மையில் வறுமையில் வாழ்வது என்பது ஒரு பலம். அது நமக்கு பல அனுபவப் படிப்பினைகளைத் தருகின்றது.

இவ்வாறு தேசிய மட்ட போட்டிக்கு தெரிவான றாணமடு இந்து மகாவித்தியாலய கபடி மற்றும் எல்லே வீராங்கனைகளை பாராட்டும் விழாவில் உரையாற்றிய சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.அமீர் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாணமட்ட பெரு விளையாட்டு போட்டிகளில் கபடி மற்றும் எல்லே போட்டிகளில் மாகாணத்தில் சாம்பியனாகி, தேசிய ரீதியில் தெரிவான நாவிதன்வெளி கோட்டத்திற்கு உட்பட்ட றாணமடு இந்து மகா வித்தியாலய வீராங்கனைகளை பாராட்டுகின்ற நிகழ்வு நேற்று முன்தினம் அதிபர் எஸ்.கதிரைநாதன் தலைமையில் நடைபெற்றது .

நாவிதன்வெளி கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி நிதர்சினி மகேந்திரகுமாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற பாராட்டு விழாவில் பிரதி கல்வி பணிப்பாளர் ஹைதர்அலி, உதவி கல்வி பணிப்பாளர்களான ஏ. முஸ்ரக் அலி, வி.ரி.சகாதேவராஜா, ஆசிரியர் ஆலோசகர்களான பி.குணரத்ன, பி. பிரதீஸ்வரன் மற்றும் அயல்பாடசாலை அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

இந்த பாராட்டு விழாவில் பணிப்பாளர் அமீர் மேலும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

இப்பாடசாலையின் வளர்ச்சியில் சமூகம் பெரும் அக்கறை காட்டி வருகின்றது. அது மகிழ்ச்சிக்குரியது. பாடசாலையும் சமூகமும் ஒன்றிணைகின்ற பொழுது அப்பாடசாலை பெரும் வளர்ச்சியை காண்கின்றது.

பல்கலைக்கழகம் செல்வதற்கும் விளையாட்டுத் துறை கூடுதலான பங்களிப்பை வழங்குகின்றது .

அந்த வகையிலே இப்பாடசாலை பழம் பெரும் பாடசாலை. இங்கு வழமையாகவே விளையாட்டுத் துறைக்கு போதிய பங்களிப்பு அளித்து வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

வறுமைதான் வாழ்வில் முன்னேற்றப்படி என்று சொல்வார்கள். நானும் ஒரு வறுமையான குடும்பத்தில் பிறந்தவன்தான். தினமும் கடலுக்குச் சென்று வலை இழுத்தவன்தான். அந்த வகையிலே ஒரு நாள் நான் கடலுக்குச் சென்று வரும்பொழுது அங்கு கூலியாக தந்த பத்து ரூபாயை எனது அம்மாவிடம் கொடுத்தேன். அவர் மறுகணமே அதனை கசக்கி என் முகத்தில் எறிந்து உன்னை அனுப்பியது கல்வி கற்கவே தவிர, இந்த பணத்தை பெறுவதற்கு அல்ல என்று சொன்னார்.


அன்று எனது தாயார் இந்த பத்து ரூபாயை மனமுவந்து ஏற்று இருந்தால் இன்று நான் உங்கள் முன்னிலையில் பேசமுடியாதிருந்திருக்கும். உண்மையிலேயே அப்படிப்பட்டவர்கள் இருந்த காரணத்தினால்தான் இன்று நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

எனவே வறுமை ஒரு தடையல்ல. அந்த வகையிலே நீங்கள் பின்தங்கிய பிரதேசத்தில் வாழுகிறோம் என்று கருதலாம். ஆனால் நீங்கள்தான் செல்வந்தர்கள் பின்தங்கிய என்று சொல்கின்ற இடங்களிலே அவர்கள் சந்தோமாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்கின்றார்கள் அதுதான் செல்வந்த நிலை. எல்லாமே மனங்களில் தான் இருக்கின்றது. நகர்ப்புறத்திலே படாடோபமாக வாழ்வார்கள். அவர்களது பிள்ளைகள் போதைகளிலும் ஒழுங்கீனமாகவும் நடப்பார்கள். இறுதியில் வாழ்க்கை சூனியமாக மாறுகிறது. ஆனால் இப்படிப்பட்ட கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்கள் சந்தோமாக வாழ்கின்றார்கள். பிள்ளைகளும் ஆரோக்கியமாக வளர்கின்றது. எனவே நீங்கள் தரமான கல்வியை முன்னெடுக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

இந்த வைபவத்தில் கபடி எல்லே போட்டியிலே சாம்பியனாக தெரிவு செய்யப்பட்ட மாணவிகள் அனைவருக்கும் பூமாலை சூட்டி கைலாகு கொடுத்து பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள். அத்துடன் இம்முறை பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகம் செல்கின்ற மாணவர்களும் பாராட்டப்பட்டனர். பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இறுதியில் வீராங்கனைகள், விளையாட்டு ஆசிரியர் சகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். செல்லும் வழியில் உள்ள ஏனைய பாடசாலைகள் ஊர்வலத்தில் வந்த வீராங்கனைகளைப் பாராட்டி நீராகாரம் வழங்கி கௌரவித்தனர்.

## பொதுமக்களின் நலன் சேவைகள் தொடர்பில் இறக்காமத்தில் விழிப்புணர்வுச் செயலமர்வுகள்




(நூருள் ஹுதா உமர்)

சமுர்த்தி காரியாலயத்தினால் பொதுமக்கள் நலன் சேவைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் செயலமர்வுகள் இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். ரஷானின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் இறக்காமம் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவினால் நடத்தப்பட்டு வருகின்றன.

இறக்காமம் 02 ஆம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள சமுர்த்தி, காத்திருப்போர் மற்றும் ஏனைய சகல குடும்பங்களுக்குமான சுகாதாரம், ஓய்வூதியம், சமுர்த்தி நலனோம்பு திட்டங்கள் தொடர்பான பொதுமக்கள் நலன் சேவைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கு நேற்று ஜீ.எம்.எம்.எஸ் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

பிரிவுக்கு பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒ.எல்.யாக்கூப் தலைமையில் நடைபெற்ற இவ்விழிப்புணர்வு கருத்தரங்கில் சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.சி.எம். தஸ்லீம் விசேட அதிதியாகக் கலந்து கொண்டு சமுர்த்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தினார்.

மேலும் இந்நிகழ்வில், கிராம மட்ட சமுர்த்தி அமைப்புகளுக்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எல். ஜாஹிட், பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம். ஜெளஸ், பிரிவிற்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர் எஸ்.எல். ஹம்சா, அபிவிருத்தி உத்தியோகத்தர் முப்தி மஹ்மூது மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமுர்த்தி சங்க உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## சம்பூர் சந்தனவெட்டையில் இறந்த நிலையில் யானை



திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவிலுள்ள சந்தனவெட்டை பகுதியில் உள்ள வயல் வெளியில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை, யானையொன்று இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது .

குறித்த இடத்திற்கு சேருநுவர வனஜீவராசிகள் அதிகாரிகள் வருகைதந்து உயிரிழந்த யானையை பார்வையிட்டனர்.

அந்த யானை தாக்கப்பட்டு உயிரிழந்ததா? அல்லது நோய்வாய்ப்பட்டு உயிரிழந்ததா? அல்லது உயிரிழப்புக்கு வேறு ஏதாவது காரணங்கள் உண்டா? என்பது தொடர்பில் இதுவரை கண்டறியப்படவில்லையெனவும் சம்பவம் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுவதாகவும் சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர். இந்த யானையின் உயிரிழப்புத் தொடர்பில் சேருநுவர வன ஜீவராசிகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளைத் தாங்கள் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் சம்பூர் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழர்களின் உணர்வை வைத்து அரசியல் செய்யும் தமிழ்தேசிய மக்கள் முன்னணியை விரட்டியடிப்போம்!

## ஜனநாயக போராளிகள் கட்சி போர்க்கொடி

தியாக தீபம் திலீபனை கட்சி அரசியலுக்காக பயன் படுத்த சிலர் தீவிரமான முயற்சியில் ஈடுபடுகின்றார்கள். தொடர்ந்து போராளிகள் இந்த நிலைமைகளை பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்கள் என ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் கதிர் தெரிவித்தார்.

தியாக தீபம் திலீபனுடைய நினைவு தினத்தில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாக நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே கதிர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர் –

தியாகதீபம் திலீபனின் வரலாறு என்பது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாறாக இருக்கின்றது. தமிழ் மக்களுடைய விடுதலைக்காக ஜனநாயக வழியில் அஹிம்சைப் போராட்டத்தை திலீபன் மேற்கொண்டார்.

இந்நிலையில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலின்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த சட்டத்தரணி சுகாஷ், மூத்த தளபதியான பஷீர் காக்காவுட் முரண்பட்டதை பார்த்தோம்.

பஷீர் காக்காவுக்கு உள்ள உரிமை அரசியல் கட்சிகளுக்குக் கிடையாது. ஜி.ஜி.பொன்னம்பலத்தின் சிலையைக் கட்டிவிட்டு நீங்கள் அரசியல் செய்யுங்கள்.

அப்போது மக்கள் உங்களை எவ்வாறு பார்ப்பார்கள் என்பதை நீங்கள் உணர்வீர்கள். நாங்கள் எந்தநேரமும் பொறுமையாக இருப்போம் என எண்ணிவிடாதீர்கள்.

தாயகப் பகுதியில் உங்கள் அலுவலகங்கள் இல்லங்கள் ஆயிரக்கணக்கான போராளிகளால் 24 மணி நேரத்துக்குள் முற்றுகையிடப்படுவதுடன் நீங்கள் வெளியேற்றப்படுவீர்கள் என்பதை எச்சரிக்கையாக சொல்லிக் கொள்கின்றேன்.

தமிழ்த் தேசிய விரோத குழுக்களால் மக்களுக்கான தலைமைத்துவம் சிதைக்கப்பட்டிருக்கின்றது.

போராளிகள் வகுப்பெடுக்கக்கூடாது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த ஒருவர் கூறுகின்றார். போராளிகள் எடுத்த வகுப்பிலேயே நீங்கள் தற்போது அரசியல் பேசுகின்றீர்கள்.

அரசியலுக்காகத் தமிழ்த் தேசியப் போராட்டத்தை விற்றுப் பிழைக்காதீர்கள். அதை பார்த்துக்கொண்டு நாங்கள் அமைதியாக இருக்கப் போவதில்லை.

மக்களுக்கு உண்மையான –நேர்மையான – தலைமைத்துவத்தை வழங்க நாம் தயாராகிக் கொண்டே இருக்கின்றோம்.

விடுதலைப் புலிகள் இல்லை என்பதற்காக நாங்கள் தான் தமிழ் தேசியவாதிகள் எனக் கூறிக்கொண்டு யாரும் இங்கு வரக்கூடாது.

அந்தக் கட்சியினுடைய தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், சுகாஷ் போன்றவர்கள் போராளிகளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு அரசியலை முன்னெடுக்கின்றீர்கள்.

இந்த வங்குரோத்தான அரசியல் நிலைமையில் இருந்து ஒருபோதும் நாங்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கமாட்டோம். நாங்கள் கடந்த காலங்களில் மிகப்பெரிய துன்பங்களை சுமந்து போராடியபோது நீங்கள் எங்கே இருந்தீர்கள்? உங்கள் தேசியப் பற்று எங்கே போனது? எதிர்காலத்தில் இதற்காக மிகப்பெரிய விளைவுகளை நீங்கள் சந்திப்பீர்கள். உங்களை விரட்டி அடிப்போம் என்பதை இந்த இடத்தில் கூறிக்கொள்கின்றேன் – என்றார்.

# எனது தந்தைக்காக நான் தொடர்ந்து போராடுவேன்!

## லசந்த விக்ரமதுங்கவின் மகள் சபதம்



படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் மகள் அஹிம்சா விக்ரமதுங்க, தனது தந்தைக்காக தொடர்ந்து போராடப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

மக்கள் தீர்ப்பாயத்தின் தீர்ப்பு தனது விடா முயற்சியையும் வாதிடுவதையும் பலப்படுத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை உள்ளிட்ட சில நாடுகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டன என ஊடகவியலாளர்கள் படுகொலை தொடர்பான மக்கள் தீர்ப்பாயம் அண்மையில் தீர்ப்பு வழங்கியது.

கொல்லப்பட்ட ஊடகவியலாளரின் சர்வதேச மனித உரிமைகள் பாரதூரமான மீறலுக்கு இலங்கை பொறுப்பேற்க வேண்டும் எனக் கூறி குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டது

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ள லசந்த விக்ரமதுங்கவின் மகள் அஹிம்சா விக்ரமதுங்க, மக்கள் தீர்ப்பாயத்தில் நீதிபதிகளின் தீர்ப்பிற்காக தனது குடும்பத்தினரும் தானும் 13 ஆண்டுகளாக காத்திருந்தார் எனத் தெரிவித்துள்ளார்.

உலகளவில், பத்திரிகையாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனையின்மை மோசமாகி வருவதாகவும் மக்கள் தீர்ப்பாயத்திற்கு நன்றி என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கொல்லப்பட்ட தனது தந்தை போன்ற பத்திரிகையா ளர்களுக்கு இறுதியாக நீதிமன்றத்தில் ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

மக்கள் தீர்ப்பாயம் தனது தந்தையின் படுகொலைக்கான ஆதாரங்களை வலுவாகவும் அழுத்தமாகவும் முன் வைத்ததுடன், தனது தந்தைக்கு எதிரான தாக்குதல்களை வழிநடத்தியதற்கும் கட்டளையிட்டதற்கும் அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ உட்பட இலங்கை அரசாங்கத்தை குற்றவாளியாகக் கண்டறிந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். தனது தந்தைக்கு நீதி கிடைக்கும் வரை தொடர்ந்து போராடுவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சங்கிலியன் தோரண வாயில் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்!

யாழ்ப்பாணம் சங்கிலியன் தோரண வாயில் புனரமைப்பு பணிகள் நேற்று (வியாழக்கிழமை) ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொல்லியல் திணைக்களமும் யாழ்ப்பாண மரபுரிமை மையமும் இணைந்து புனர்நிர்மாண பணிகளை ஆரம்பித்துள்ளன. இதற்காக 23 லட்சம் ரூபா செலவு மதிப்பிடப்பட்டுள்ள நிலையில் அதற்கான நிதி பங்களிப்பை யாழ்ப்பாண மரபுரிமை மையம் வழங்கவுள்ளது.

குறித்த தோரண வாயிலின் பாதுகாப்பு , புனர்நிர்மாணம் மற்றும் நில வடிவமைப்பு ஆகிய செயற்திட்டமே முன்னெடுக்கப்படவுள்ளது. சங்கிலியன்தோரணவாயில் அல்லது சங்கிலித்தோப்பு வளைவு என அழைக்கப்படுவது யாழ்ப்பாண அரசின் கடைசி மன்னனான சங்கிலியனின் மாளிகை அமைந்திருந்த இடம் எனக் கருதப்படுகின்றது.


சங்கிலித்தோப்பு வளைவு யாழ்ப்பாணம் – பருத்தித்துறை வீதியில், நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் சிறிது தூரத்தில் இது அமைந்துள்ளது.

# டொலரைச் செலுத்தியவர்களுக்கு மட்டுமே இனி எரிவாயு விநியோகம்!

உள்நாட்டு சந்தைகளுக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை புதிய எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட மாட்டா என லிற்றோ நிறுவனம் தெரிவித்துள்ளது. வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள், இலங்கையில் வசிக்கும் அவர்களது உறவினர்களுக்காக புதிய எரிவாயு சிலிண்டர்களை முன்பதிவு செய்யும் நடைமுறையின் காரணமாக அவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதே இதற்கு காரணமாகும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. நாடு எதிர்நோக்கியுள்ள டொலர் நெருக்கடிக்குத் தீர்வாக லிற்றோ நிறுவனம் அண்மையில் இந்த நடைமுறையை அறிமுகப்படுத்தியது.

அதற்கமைய, வெளிநாடுகளில் உள்ள சில இலங்கையர்கள் இலங்கையில் வசிக்கும் அவர்களது உறவினர்களுக்காக டொலரை செலுத்தி புதிய சிலிண்டர்களை முன்பதிவு செய்துள்ளனர் என லிற்றோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# திருகோணமலை துறைமுகத்திலிருந்து 30 வருடங்களுக்குப் பின்னர் ஏற்றுமதி!





திருகோணமலை துறைமுகம் 30 வருடங்களுக்கு பின்னர் தனது முதலாவது ஏற்றுமதியை மேற்கொண்டுள்ளதாக இலங்கை துறைமுக அதிகாரசபை அறிவித்துள்ளது. இந்த முதல் ஏற்றுமதி கப்பலில் புல்மோட்டை கனிய மணல் லிமிடெட் நிறுவனத்துக்குச் சொந்தமானகனியமணல்ஏற்றுமதிசெய்யப்பட்டுள்ளது.

குறித்த கனிய மணலை சீனாவிற்கு ஏற்றுமதி செய்துள்ளதாக இலங்கை துறைமுக அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது.

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல தசாப்தங்களாக ஈழ தமிழர் இனப்பிரச்சினையில் இந்தியா தீவிரமான அக்கறை கொண்டுள்ளதுடன், இலங்கை உட்பட உலகில் உள்ள வேறு எந்த நாட்டையும் விட எமது அவல நிலையைப் பற்றிய சிறந்த அறிவையும் புரிதலையும் கொண்டுள்ளது.

தமிழராகிய நாம் துன்பங்களை எதிர்கொள்ளும்போது, முதலில் உதவிக்கு வருவது இந்தியா தான். உதாரணமாக, 1983 இல் தமிழர்கள் சிங்கள காடையர்களால் பெருமளவில் படுகொலை செய்யப்பட்டு, தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட போது, இலட்சக்கணக்கான தமிழர்கள் சிறிய படகுகளில் இந்தியாவுக்கே பாதுகாப்புக்காகத் தப்பிச் சென்றனர்.

இப்போதும் இந்தியாவில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் அகதிகள் வாழ்கின்றனர். நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகும் உணவு, தங்குமிடம், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பை தமிழ் அகதிகளுக்கு இந்தியா தொடர்ந்தும் வழங்கி வருகின்றது.

இந்தியா பாதுகாப்பு வழங்கியது மட்டுமல்லாது, பிரதமர் இந்திரா காந்தியின் தலைமையில் இந்தியா, 1983இல் நியூயோர்க்கில் நடந்த ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கு எங்களின் பிரச்சினையை எடுத்துச் சென்று, தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் நமது அவல நிலையை உலகத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றது.

ஐ.நாவில் எங்களுக்கு மீண்டும் இந்தியாவின் உதவி தேவைப்படுகின்றது. இது எங்களின் பாதுகாப்புடன் நேரடியாக சம்பந்தப்பட்டது.

இலங்கை ஆயுதத் படையினரால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதற்காகவும், நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்கள் மற்றும் சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்ததற்காகவும், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்துவதற்கு இந்தியாவின் உதவி நமக்குத் தேவை.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடாக, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு அனுப்புவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க இந்தியாவுக்கு உரிமையும் அதிகாரமும் உள்ளது.

எமது பிராந்தியத்திலிருந்து தொலைதூரத்திலுள்ள எமது இனப்பிரச்சினை தொடர்பாக சரியான புரிதல் இல்லாத நாடுகளை விட, எமது பிராந்தியத்தின் தலைமை நாடாகிய, நமது அவலநிலையைப் பற்றி அதிக புரிதலையும் பொறுப்பையும் இந்தியா கொண்டுள்ளது.

நமது அண்டை நாடாக, ஐ.நா. மற்றும் பிற சர்வதேச மன்றங்களில் தலைமைப் பாத்திரத்தை வகிக்க இந்தியாவை நாம் வலியுறுத்துகிறோம்.

உக்ரைன் - ரஷ்யா போர் விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதில் ஐரோப்பிய நாடுகள் முன்னோடியாக இருப்பது போல், இலங்கை பிரச்சினையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல இந்தியாவுக்கு முழு உரிமை உண்டு.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தற்போது இலங்கை தொடர்பான வரைபு தீர்மானம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த வரைவுத் தீர்மானத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கையைச்சர்வதேசகுற்றவியல்நீதிமன்றத்துக்குப் பரிந்துரைக்கும் பரிந்துரையை உள்ளடக்கியிருக்கவில்லை.

மேலும், இந்த பரிந்துரையை அனைத்து முந்தைய ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர்கள் மற்றும் ஒன்பது முன்னாள் ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர்களும் பரிந்துரைத்துள்ளனர். இவர்கள் அனைவரும் இலங்கைக்கு விஜயம் செய்து அறிக்கைகளை எழுதியுள்ளனர். அத்துடன் இவர்கள் இலங்கை தொடர்பான ஐ.நாவின் நிபுணர்கள் ஆவார்.

நாம் யாழ்.பல்கலைக்கழக மாணவர் சங்கம், தமிழ் அரசியல் கட்சிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும்சிவில்சமூகக்குழுக்கள்இணைந்துஇலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பரிந்துரைப்பதன் முக்கியத்துவம் குறித்து நாடுகளின் முக்கிய குழுவுக்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளோம். ஆனால், எங்களது கோரிக்கைகள், நமது தொடரும் அவல நிலையைப் பற்றிய புரிந்துணர்வும் அனுபவமும் இல்லாத மைய நாடுகளின் குழுவால் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

எமது கடந்தகால அனுபவத்தின் அடிப்படையில், இலங்கையைச்சர்வதேசகுற்றவியல்நீதிமன்றத்துக்குப் பரிந்துரைக்கப்படாவிட்டால், தமிழர் தாயகத்தில் பெருமளவில் ஆக்கிரமித்துள்ள இலங்கை இராணுவத்தினர் பொறுப்புக்கூறல் தொடர்பான அச்சம் இன்றி தமிழர்களுக்கு எதிராகப் பாரிய அட்டூழியங்களை எந்தத் தயக்கமுமின்றி தொடர்வதற்குத் துணிந்துவிடும் என்று நாங்கள் தீவிரமாகக் கவலைப்படுகின்றோம்.

தமிழர் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இதே இராணுவத்தினரே ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்ததுடன், நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்களையும் சிறுமிகளையும் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தியவர்கள் என்பதை நினைவில்கொள்ள வேண்டும்.

தமிழ் இனத்தைச் சேர்ந்த நாம் தமிழர் என்ற காரணத்துக்காகவே பெரும் விலை கொடுத்துள்ளோம். உதாரணமாக, இலங்கை தொடர்பான ஐ.நாவின் உள்ளக ஆய்வு அறிக்கையின்படி, போரின் இறுதி ஆறு மாதங்களில் மட்டும் சுமார் 70 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டம் பிப்ரவரி 2017 இல், தமிழ்ப் பெண்கள் பாலியல் அடிமைகளாக அடைக்கப்பட்டு சித்திரவதைபடுத்திய இலங்கை இராணுவக் கற்பழிப்பு முகாம்கள் பற்றிய விவரங்களை ஐ.நாவிடம் ஒப்படைத்தது. மேலும் குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்த முக்கியமான நேரத்தில், ஐ.நா. மன்றத்தில் உதவுமாறு இந்தியாவை மீண்டும் வலியுறுத்துகின்றோம். இம்முறை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தில் இலங்கையைச் சர்வதேச குற்றவியல்நீதிமன்றத்துக்குப்பரிந்துரைக்க வலியுறுத்தி நிற்கின்றோம் - என்றுள்ளது.

## யாழ்ப்பாணத்துக்கு.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமானங்கள் வருவதில்லை. எனவே, இந்தியாவிலிருந்து ஒரு விமானத்தையாவது கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுங்கள்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார் துறைசார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கு யாழ்ப்பாணம் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் மட்டுமே வேலைக்கு அமர்த்தப்பட்டனர். வெளி மாவட்டங்களில் இருந்து எவரும் கொண்டு செல்லப்படவில்லை. 'விரைவில் விமான நிலையத்தைத் திறவுங்கள், விமானங்கள் அனுப்படும்' என்று சில விமான சேவை நிறுவனங்கள் உறுதியளித்திருந்தன. ஆனால், இதுவரையும் எந்தவொரு விமானமும் அங்கு வரவில்லை. தேவையான ஏற்பாடுகளை நாம் செய்துகொடுத்துள்ளோம்.

இந்திய எயார் லைன் விமானம் வரும் எனக் கூறப்பட்டது. அதுவும் வரவில்லை. தூது அனுப்பினோம். தீர்வு இல்லை.

பிரச்சினைகள் இருந்தால் எம்முடன் பேச்சு நடத்தலாம். அதற்கான கோரிக்கையும் விடுக்கப்படவில்லை.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்காக பெருமளவு நிதி செலவிடப்பட்டுள்ளது. பணியாளர்களுக்குசம்பளம்வழங்கப்படுகின்றது. எனவே, இந்தியாவுக்குச் சென்று பேச்சு நடத்தி, ஒரு விமானத்தையாவது கொண்டு வாருங்கள். எமது தரப்பில் செய்யக்கூடிய அனைத்தையும் செய்துள்ளோம் - என்றார்.

இதற்குப் பதிலளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்,

இரத்மலானை மற்றும் மத்தள விமான நிலையங்களில் பயணிகளுக்கான வரி இரத்து செய்யப்பட்டுள்ளது போல் யாழ்ப்பாணம் - பலாலி விமான நிலையத்துக்கும் செய்தால் - ஆகக் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்காவது செய்தால், விமான சேவை உடனடியாக ஆரம்பமாகும்.

இந்தியாவின் எயார் வேர்ஸ் நிறுவனம் இதற்காகப் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. எனவே, எவரும் விமானம் கொண்டுவரவிலை எனக் கூற வேண்டாம். இந்திய நிறுவனம் தற்போதுகூட தயார் நிலையில்தான் உள்ளது - என்றார்.













இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.09.2022இல் வெளியிடப்பெற்றது.